2023 ஏப்ரல் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா காலத்தில் தனியார் நிறுவனங்களில் பணியாற்றிய பலருக்கு ஊதியம் கிடைக்காமல் இருந்தது. அதிகமான கடன் பெற்றவர்கள் அவற்றைத் திருப்பி கொடுக்காத சூழல் ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்குக் கடனை திருப்பி செலுத்த தகுந்த நேரம் வழங்கவோ, கடனைத் திருப்பி செலுத்துவதற்கு உரிய வட்டியைத் தள்ளுபடி செய்யவோ மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு சங்கங்களுக்கும், தொழிலாளர்களுக்கும் தனிப்பட்ட சில தகுதிகள் மற்றும் இதர வரையறைகளெல்லாம் உள்ளன. ஆகவே, அந்தந்த சங்கங்களுடைய நிதி நிலைமைகளைப் பற்றி ஆங்காங்கு அமைந்திருக்கக்கூடிய அந்த சங்கங்களுடைய நிர்வாகத்தின் மூலமாக உரிய தீர்வுகளை மேற்கொள்வது ஏதுவாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 96, மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

96—

இலவச மின்சாரம்

***53175—திரு. T.K. அமுல் கந்தசாமி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2023 ஏப்ரல் 1

வால்பாறை தொகுதியில் உள்ள தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களின் கிணறுகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் இலவச மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

இந்த ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 50,000 விவசாயிகளுக்கான இலவச மின் இணைப்பு வழங்கக்கூடிய திட்டத்தில் அ.தி.மு.க.வைச் சார்ந்த 66 சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதிகளில் மட்டும் 21,728 விவசாயிகளுக்கான மின் இணைப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அதில் வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் மட்டும் 998 விவசாயிகளுக்கான மின் இணைப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

எனவே, வால்பாறை தொகுதியில் ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் மக்களுக்கான இலவச மின் இணைப்பு முன்னுரிமை அடிப்படையில் தேவையெனில், அரசினுடைய திட்டங்களில் மின் இணைப்புக்காக விண்ணப்பித்து, அதற்கான பலனை பெறலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி அவர்கள்.*

திரு. T.K. அமுல் கந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோருக்கும் வழிகாட்ட நான் இருக்கின்றேன்; வந்தோரை வரவேற்கக் காத்திருக்கின்றேன் என்று கூறும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளரும், எங்களின் வாழும் எம்.ஜி.ஆர்., மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் எடப்பாடியார் மற்றும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை நிலைய செயலாளரும், கோவை மாவட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தொண்டர்களின் கலங்கரை விளக்கம், எங்களின் ஆருயிர் சகோதரர் மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சிக் கொறடா அருமைச் சகோதரர் திரு. எஸ்.பி. வேலுமணி ஆகிய இருவரையும் வணங்குகிறேன்.*

2023 ஏப்ரல் 1]

முற்பகல் 10–45

எனது வால்பாறை தொகுதிக்குட்பட்ட பகுதியில் மலைவாழ் மக்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக வசிக்கின்றனர். இந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்கள் ஒரு ஏக்கர் முதல் ஐந்து ஏக்கர் வரை நன்செய்,புன்செய் நிலங்களில் விவசாயம் செய்து வருகின்றனர். எங்கள் தொகுதியில் மட்டுமின்றி, தமிழகம் முழுவதிலும் வசிக்கும் மலைவாழ் மக்கள் மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் விவசாயக் கிணறுகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதில் முன்னுரிமை அளிக்க வேண்டும். தற்போது, முன்னாள் இராணுவத்தினர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், கைம்பெண்கள், மாற்றுத் திறனாளிகள், மலைவாழ் மக்கள், ஆதி திராவிடர் மற்றும் கலப்புத் திருமணம் புரிந்தோர் உள்ளிட்டவர்களுக்கு மட்டும் ஓராண்டிற்கு 250 இணைப்புகள் வழங்கப்படுகின்றன. பயனாளிகளை அதிகப்படுத்தி, கூடுதல் மின் இணைப்புகள் வழங்க வேண்டும். TAHDCO *மூலமாக பயனாளிகளைக் கண்டறிய வேண்டும்.* SC, ST *பிரிவில் பெண்களுக்கு மட்டும்* TAHDCO *மூலமாக இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது. இந்த மின் இணைப்பு அனைவருக்கும், இலவச மின் இணைப்புத் திட்டத்தின்கீழ்* deposit *இல்லாமல் வழங்க முன்வர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்களின் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *2016–2017* ஆம் ஆண்டிற்குப் பிறகு கடந்த நான்கு ஆண்டுகளாக, குறிப்பாக கடந்த ஆட்சியில் நான்கு ஆண்டுகளாக அரசினுடைய திட்டங்களான TAHDCO, Jeevan Dhara Scheme–மூலம் ஒரு மின் இணைப்புக்கூட வழங்கப்படாமல் இருந்ததை கவனித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் முன்னுரிமை கொடுத்து, ஒரே ஆண்டில் காத்திருக்கக்கூடிய முன்னுரிமை பெற்ற அந்த விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பை வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டதன் அடிப்படையில், கடந்த ஆண்டே காத்திருக்கக்கூடிய, விவசாயிகள் அனைவருக்கும் மின் இணைப்பை வழங்கி சாதனை படைத்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்

அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) யாரேனும் முன்னுரிமைத் திட்டத்தின்கீழ் விண்ணப்பித்திருந்தால் அரசு அதில் கவனம் செலுத்தும். கடந்த ஆண்டு மட்டும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 23 கோடி ரூபாய், அரசினுடைய நிதியைக் கொடுத்து, அதிலே பயன்பெறுவதற்கான வழிவகைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அதன்மூலம் வால்பாறை தொகுதியில் இருக்கக்கூடிய விவசாயப் பெருமக்கள், குறிப்பாக ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ் மக்கள் பயன்பெறலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி அவர்கள்.

திரு. T.K. அமுல் கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை மலைப் பகுதியிலுள்ள வீடுகளுக்குச் செல்லும் மின் கம்பிகள்மீது, அடிக்கடி வீசும் காற்று மற்றும் மழையின் காரணமாக, மரங்கள் சாய்ந்து மின் தடை ஏற்படுகின்றது. மேலும், கருமலை எஸ்டேட், உருளிக்கல் எஸ்டேட், குரங்குமுடி எஸ்டேட் ஆகிய பகுதிகளில் மின் கசிவு ஏற்பட்டு சுமார் 16 வீடுகள் தீக்கிரையாகின. அவ்வாறு நடைபெறாமல் இருக்க, புதைவடக் கம்பிகள் மற்றும் மாற்று ஏற்பாடுகள் செய்து தரவும், அதேபோல வீடுகளுக்கு அருகாமையில் இருக்கக்கூடிய காட்டுப் பகுதியில் இருள் சூழ்ந்த நிலை இருப்பதால் வன விலங்குகள் நிற்பதே மக்களுக்குத் தெரிவதில்லை. அந்த இடத்தில் solar விளக்குகள் அமைப்பதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்களின் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை துறைக்கு அனுப்பப்பட்டு, அதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்ட பிறகு நிதிநிலைமைக்கேற்ப முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 97, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

97—

பேருந்து வசதி

***11791—திருமதி ம. வரலட்சுமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு பேருந்து நிலையம் முதல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற செங்கல்பட்டு பேருந்து நிலையத்திலிருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு 19 பேருந்துகள் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்து வசதிகளே போதுமானதாக இருக்குமென்பது துறையினுடைய கருத்தாக இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி அவர்கள்.*

திருமதி ம. வரலட்சுமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில்தான் அரசு கலைக் கல்லூரி, அரசு சட்டக் கல்லூரி, மகளிர் கல்லூரி, அரசு மருத்துவமனை, நீதிமன்றம் ஆகிய அனைத்தும் இருக்கின்றன. இப்போது பிரச்சினை என்னவென்றால், திண்டிவனம், வந்தவாசி, திருவண்ணாமலை, காஞ்சிபுரம் செல்கின்ற அனைத்து பேருந்துகளும் புறவழிச் சாலை வழியாக சென்றுவிடுகின்றன. எந்தப் பேருந்தும் செங்கல்பட்டு நகருக்குள்*